# 5 படைப்பு

றெபேக்கா : அம்மா எனது ரோசாச் செடியில் பூ ஒன்று பூத்துள்ளது.

அம்மா : பார்ப்போம், எமது தோட்டமே பூக்களால் நிறைந்துள்ளது பறவைகளின் இனிய ஒலி, அழகழகான வண்ணத்துப் பூச்சிகள் இன்று எத்துணை அழகான நாள்!

றெபேக்கா : அண்ணா! இவ்வளவு அழகான உலகம் உண்மையில் எப்படி உருவானது? இவ்வளவு அழகான ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியவர் யார்?

றோய் : உலக ஆரம்பம் பற்றி பல்வேறு கோட்பாடுகள் உள்ளன.

றெபேக்கா : அவை என்ன அண்ணா?

றோய் : பரிணாம வாதக் கொள்கை, பிக்பான்ட் கொள்ளை, லாப்லாஸ் கொள்கை.

நயோமி : அண்ணா கோட்பாடுகள் எல்லாம் உண்மையானவையா?

றோய் : அவற்றின் உண்மைத் தன்மை பற்றி விஞ்ஞான ரீதியாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

நயோமி : அவை நிரூபிக்கப்பட்டால் திருவிவிலியத்திலுள்ளவை பொய்யாகி விடுமா?

றோய் : ஒருபோதும் இல்லை.

நயோமி : அது ஏன்?

றோய் : அக்கோட்பாடுகளால் சொல்லப்படுவது இவ்வுலகம் உருவாகிய விதம் பற்றியே ஆகும். ஆனால் திருவிலிய படைப்புக் கதையால் வெளிப்படுத்தப்படுவது உலகம் படைக்கப்பட்ட விதம் பற்றியல்ல, மாறாக, இறைவனே உலகைப் படைத்தார் என்பது பற்றியே ஆகும். மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தி ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றான் விஞ்ஞானம் அதற்கு உதவுகின்றது. எனினும் உலகப் படைப்பின் அதிபதி இறைவனே என திருவிவிலியக் கதைகள் எடுத்துரைக்கின்றன.



5.1 படம் சூழல்

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (தொடக்கநூல் 1.-11)

தொடக்கநூலில் முதலாம் அதிகாரம் தொடக்கம் பதினோராம் அதிகாரம் வரை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என அழைக்கப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கற்கும்போது வரலாற்று ரீதியான விடயங்களை ஆராய முடியாது.

திருவிவிலிய ஆசிரியர் புராணக் கதைகள் வழியாக, இவ்வுலகின் ஆரம்பமும் மனிதனின் ஆரம்பமும் இறைவனால் ஆனது என்பதை முன்வைக்கிறார். இக்கதைகள் வழியாக ஒரு செய்தியை முன்வைப்பதே அவரது நோக்கம். மாறாக இவ்வுலகமும் மனிதனும் உருவான விதம் பற்றிக் கற்பிப்பதல்ல. இப்பகுதியில் உள்ள கதைகள் மூலம் கற்பிப்பது மறை உண்மைகள் பற்றிய செய்திகளே அன்றி விஞ்ஞான அல்லது வரலாற்று செய்திகள் அல்ல. இறைவனே உலகின் படைப்பாளர் என்பதே அவர் முன்வைக்கும் பிரதான செய்தியாகும்.

**தொடக்க நூலில் படைப்பு பற்றிய இரண்டு கதைகள் உள்ளன.**

1. படைப்புப் பற்றிய முதல் கதை (தொநூ 1:1-2:4 a)
2. படைப்புப் பற்றிய இரண்டாம் கதை (தொநூ 2:4 b -25)

## படைப்புப் பற்றிய முதல் கதை

இக்கதை குருமரபின் ஆக்கமாகும். இறைவழிபாட்டு அமைப்பினுள் இறையியல் அர்த்தத்தில் படைப்பை ஏழு நாட்களுக்குள் வரையறைப்படுத்தியுள்ளார். இதில் ஆசிரியரின் நோக்கம் ''சபாத்'' நாளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

அதாவது இறைவன் ஆறு நாட்களில் உலகைப் படைத்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். எனவே நாமும் அந்நாளை இறைவனுக்காக தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே, இதன் மூலம் வெளிப்படுத்தப்படும் இறை செய்தியாகும். இறைவன் தமது உருவிலும் சாயலிலும் மனிதனைப் படைத்துள்ளார். வேறு எந்தப் படைப்பையும் அவ்வாறு படைக்கவில்லை. எனவே மற்ற எல்லாப் படைப்பையும் விட மனிதன் மேன்மையானவன். அந்த மேன்மை பின்வரும் மூன்று பண்புகள் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது.

1. புத்தி
2. சுயாதீனம் (சுதந்திரம்)
3. அழியாத ஆன்மா

மனிதன் ஏனைய படைப்புக்களை விட மேன்மையானவன் என்பதால் அவன் தனது புத்தி, சுதந்திரம் என்பவற்றை நன்மை செய்வதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதனால் அழியாத ஆன்மாவைக் கொண்ட மனிதன் முடிவில்லா வாழ்விற்குள் நுழைய முடியும்.

**படைப்புப் பற்றிய இரண்டாம் கதை**

இக்கதை யாவே மரபைச் சேர்ந்த ஆக்கமாகும். படைப்புக்களுள் உயர்ந்த படைப்பு மனிதனாவான். மனிதனுக்கு மட்டுமே உயிர்மூச்சு வழங்கப்பட்டுள்ளது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு இதன் மூலம் காண்பிக்கப்படுகின்றது.

மனிதனின் விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டாள், இதயத்திற்கு நெருக்கமான விலா எலும்பிலிருந்தது படைக்கப்பட்டதால் பெண் ஆணின் அடிமையோ அல்லது அவனை விட உயர்ந்தவளோ அல்ல. அவனுக்குத் துணை யானவள். அவர்களின் உறவு, அன்பை அடிப்படையாகக் கொண்டது. மேலும் பெண் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் அவள் இன்றி, அவனும், அவன் இன்றி அவளும் முழுமையடைவதில்லை. இந்த முழுமையின் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மதித்து அன்பு செய்து திருமணவாழ்வை வாழ உறுதி பூண வேண்டும். மேலும், படைப்புகளில் மேலான படைப்பு மனிதன் என்பதால் மனித மாண்பைப்பேணி ஆண் பெண் வேறுபாட்டுக்கு மதிப்பளித்து மரியாதையுடன் வாழ இதன் மூலம் அழைக்கப்படுகின்றான்.

**செயற்பாடு**

1. படைப்பின் முதல் கதை மூலம் மனிதனின் மேன்மையினை வெளிகாட்டும் **பண்பு** ஒன்றை தருக.
2. அப் **பண்பு** வெளிப்படுத்தும் **விடயங்கள்** மூன்று தருக.
3. படைப்பின் இரண்டாம்கதை மூலம் மனித மாண்பை வெளிப்படுத்தும் விடயங்கள் எவை?
4. மனித மாண்பைப் பேண அவன் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

**வாழ்க்கைக்கு**

✝ இறைவன் பிரபஞ்சத்தின் படைப்பாளன் என ஏற்றுக் கொள்வோம்.

✝ இறைசாயலில் படைக்கப்பட்ட நாம் அதன் மாண்பைப் பேணி வாழ்வோம்.

✝ ஆண் பெண் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து ஒத்துழைப்புடன் வாழ்வோம்.